**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.218/2024 - PW-12**

| | |
|---|---|
| Name | திரு. ராஜேந்திரன் |
| Husband/Father Name | முனுசாமி |
| Village /Area | பழையபாளையம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாயம் |
| Age | 53 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.03.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 08.05.2024 அன்று காலை சுமார் 6.30 மணியளவில் கோவிந்ததாங்கல் ஜங்க்ஷனிடம் சண்முகம் என்பவர் டிபன் சென்டரிடம் சென்ற போது அங்கிருந்த வடிவேலு என்பவரிடம் தனக்கு கொடுக்க வேண்டிய பணம் ரூ.2,000/- கேட்ட போது ஒருவருக்கு ஒருவர் தகராறு ஏற்பட்டதாகவும் வடிவேல் என்பவர் அங்கிருந்த விறகு கட்டையால் சண்முகத்தின் தலை மீது காயம் ஏற்படுத்தியதாகவும் காயம்பட்ட சண்முகத்தை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். 11.05.2024ம் தேதி சிகிச்சையிலிருந்த சண்முகம் இறந்து விட்டார். அவரை நானும் ஊர்காரர்களும் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அவர் இறந்த நிலையில் இருந்தார். அங்கு பானாவரம் காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்தார். அந்த பிரேத விசாரணை அறிக்கையில் நான் கையொப்பம் செய்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பிரேத விசாரணை அறிக்கையிலுள்ள 3வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது. நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு ஊர் சார்பாக சென்ற 6 நபர்களுடன் சேர்ந்து சென்றேன்.

நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பற்றி கேள்விபட்டு தான் சாட்சி அளிக்கிறேன்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.23 18:48:25 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.